12.11.2025

அ.வ.எண்.196/2012

வா.சா.2 ரூக்குநாதன் குறுக்கு விசாரணை

1. நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதியின் வக்கில் தான் என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தார். எனது பிரமணாவாக்குமூலத்தில் 1994ம் வருடம் தேவகடாசம் கிரைய வாங்கிய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த கிரைய ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை. தாவாசொத்தின் மொத்த விஸ்தீரணம் 40 ஏக்கர் ஆகும் அதில் 9 ஏக்கர்தான் தாவாசொத்து அதன் சர்வே எண்கள் தெரியாது. பட்டா எண் தெரியும். எத்தனை சர்வே எண்களுக்கு வழக்கு நடக்கிறது என்றால் தெரியாது. எத்தனை சர்வே எண்களுக்கு 1ம் வாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் நிறைய சொத்துகள் வாங்கியுள்ளார்.

2. ராமதாஸ் பெயரில் வருவாய் துறை ஆவணங்களை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள பட்டா எண்.19 பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எந்த தேதியில் பட்டா வழங்கபட்டது என்றால் எனக்கு தெரியாது. பட்டாவில் குறிப்பிட்டுள்ள தேதி தெரியாது. மேற்சொன்ன பட்டா எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழங்கபட்டது என்றால் 9 ஏக்கர் இருக்கும். அதன் சர்வே எண்கள் தெரியாது. வெங்கடசுப்பாரெட்டியார் தாவா கிராமத்தில் குடியிருந்து வந்தாரா என்றால் கேள்விப்பட்டுள்ளேன். வெங்கடசுப்பாரெட்டியாரின்

சகோதரர்கள் பெயர் ஐயப்ப ரெட்டியார், வீராசாமி, பெருமாள் ஆகியோர்களை தெரியுமா என்றால் கேள்விபட்டுள்ளேன் ஆனால் பார்த்தில்லை. மேற்சொன்ன அனைவரும் வெங்கடசுப்பாரெட்டியாரின் வகையறா என்றால் சரிதான்.

3. பெருமாள் ரெட்டியாரின் வாரிசுகள்தான் 1, 2, மற்றும் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். தாவாசொத்திற்கு வெங்கடசுப்பாரெட்டியார் பெயரில் தனிபட்டா இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் கூட்டுபட்டா தான் உள்ளது. அது பங்குமால் நிலமாகும். தனிப்பட்டா கிடையாது. கூட்டுபட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவாசொத்தின் ஜக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. அது பெரிய சொத்தாகும். வாதிகள் அனைவரும் சென்னையில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் பிரதிவாதிகள் வாதிகள் அனுபவத்தை இடையூறு செய்தார்கள் என்று கூறியுள்ளேன். அது எந்த தேதியில் தடை செய்தார்கள் என்றால் தேதி தெரியாது.

4. எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எல்லாம் எனக்கு தெரிந்த விவரங்கள்தான். தேவகடாசம் இறந்த தேதி தெரியாது. கல்யாண தேவகடாசம் இறந்த தேதி தெரியாது. எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எதுவும் தெரியாது, தாவாசொத்தின் முழு விவரமும் தெரியாது, நான் வாதியிடம் பணம் பெற்றுக் கொண்டு பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதகளின் பூர்வீக கிராமம் தாவா கிராமம், தாவாசொத்து பிரதிவாதிகளின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல.